[1967, மார்ச் 23

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இரண்டாவது மானியக் கோரிக்கை தீர்மானத்தின் மீதுள்ள வெட்டுத் தீர்மானங்கள் 6-ல் இருந்து 14 வரை உள்ள வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன. இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள முழு முதல் தீர்மானம் :—

"கோரிக்கை எண் II—'மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,03,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்" என்பது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக உள்ளவர்கள் 'ஆம்' என்ற குரல் கொடுக்க வேண்டும் என்றும், எதிர்ப்பவர்கள் 'இல்லை' என்று சொல்லுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆம் என்று கூறியவர்கள் அதிகம் என்று கருதுகிறேன். ஆம் என்றவர்கள் அதிகம்; எனவே, இந்த முழு முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக அறிவிக்கிறேன். கோரிக்கை நிறைவேற்றப்பட்டு மானியத் தொகை வழங்கப்பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, பொது விற்பனை வரியும் ஏனைய தீர்வைகளும் என்ற மானியக் கோரிக்கை தீர்மானத்தை மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

முற்பகல் 10–30 **மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இதில் மூன்று முக்கியமான பிரச்னைகளைப் பற்றி மட்டும், நிலவரி, கல்வி, வேளாண்மை ஆகிய மூன்றைப் பற்றி மட்டுந்தான் இங்கு வெட்டுப் பிரேரணைகள் கொண்டுவர இருப்பதால் முதலிலே அந்த மூன்றையும் முடித்துவிட்டு இறுதியில் மற்ற எல்லாவற்றையும் மொத்தமாக எடுத்துக் கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன். பதின்மூன்றாவதாகவுள்ள கல்விபற்றி சபை முன் சொல்ல அனுமதி வேண்டுகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அவை முன் வைக்கப்பட்டுள்ள வரிசையை மாற்றி கோரிக்கை எண் பதின்மூன்றாக வுள்ள கல்வி பற்றிய கோரிக்கையை முதலில் எடுத்துக்கொள்ள அவை அனுமதிக்க வேண்டுமென்று அதுபற்றி ஒரு சிறு தீர்மானத்தை மன்ற முதல்வர் அவர்கள் கொண்டுவரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

6. அரசாங்கத் தீர்மானங்கள்.

(அ) அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : "கோரிக்கை எண் 13-வதாக இருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை மற்ற மானியக் கோரிக்கைகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை அவையின் முன் வைக்கிறேன்.

தீர்மானம் அவை முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

1967 மார்ச் 23]

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : 13-வது கோரிக்கை, கல்வி என்ற தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த அவை இப்போது தீர்மானித்திருக்கிறது. அதன்படி, கல்வி பற்றிய கோரிக்கை தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை அவர்கள் கொண்டு வருவார்கள்.

5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XIII— கல்வி.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : கவர்னர் அவர்களின் பார்வையைப்படி கீழ்க்கண்ட தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்:—

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,83,61,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்".

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : இதில், முதல் வெட்டுத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கே. விநாயகம் அவர்கள் கொண்டுவருவார்கள்.

*SRI K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I move the following cut motion standing in my name :—

'That the allotment of Rs. 15,83,61,800 under Demand No. XIII—Education, be reduced by Rs. 100'

to discuss about the failure of Gavernment to announce that complete fee concession would be given to all students irrespective of incomes of their parents and irrespective of the communities to which they belong at the P.U.C. level of University education from the academic year 1967-68.

திரு. வி. கே. கோதண்டராமன் : என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன்மொழிகிறேன்.

"பாடசாலைக் கட்டிடங்கள் விஷயமாக விவாதிக்க" கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,83,61,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : முழு முதல் தீர்மானம், வெட்டுத் தீர்மானங்கள் இவை மீது இப்போது விவாதம் நடைபெறும். முதலில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பேசுவார்கள்.

* SRI K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I am fully conscious that this is only an Interim Budget and the Government want only a Vote on Account. But an important aspect has got to be emphasised even at this stage because usually the colleges in the State of Madras open in the month of June and the previous Ministry had committed itself to the policy, almost obtained the